# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,575 — 1958 නොවැම්බර් 3 වැනි සඳුද — 3.11.1958

11,575 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் எம். எல். 1958/N. — உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு மாத்தளை உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பந்துல எஸ். தி. சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதி, 11,476 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எனது எம். எல். 1958/K இலக்கமுடைய உணவுக் கட்டளையில், மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவற்றைக் குறித்தமட்டில், குறித்த அட்டவணையில் முறையே 3 ம் 4 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும், 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய் பற்றிய எனது விலைக் கட்டளையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் II ம் அட்டவணையின் 3 ம் 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை வியாபாரவிலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக மாத்தளை மாவட்ட பரிபாலன மாவட்ட எல்லைக்குள் விற்றல் ஆகாது.

(3) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதி, வெளியான 11,476 இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட ML/1958/K இலக்க உப உணவு விலைக் கட்டளையின் (III) தொடக்கம் (VIII) ம் பத்திகள், இதனோடிருக்கும் II ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் செத்தல் மிளகாயைப் பொறுத்த இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும் என ஆணையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் திகதி, பி.ப. 1.25 மணிக்கு மாத்தளையில் கையொப்பமிடப்பட்டது.

பந்துல எஸ். தி. சில்வா,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை பரிபாலன மாவட்டம்.

#### அட்டவணை II

| பத்தி 1 விப[illegible] | பத்தி 2 பகுதி | பத்தி 3 மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை | பத்தி 4 சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| செத்தல் [illegible] | 1 .. | 89 41 .. | 0 87 |
| | 2 .. | 89 61 .. | 0 88 |
| | 3 .. | 89 76 .. | 0 89 |
| | 4 .. | 90 16 .. | 0 90 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. எம். என். 11—1958. — உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்).

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் 4 ம் பிரிவை அச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மன்னார் மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சண்முகம் பரமநாதன் ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட எம். என்./9—1958 ம் இலக்க உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியவற்றைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2 ம், 3 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும், 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய் பற்றிய எனது விலைக் கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம் 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தரொன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக விதிக்கிறேன் ; குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாக மன்னார் மாவட்ட எல்லைக்குள் விற்கலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட உப உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட எம். என்./9—1958 ம் இலக்க உணவு விலைக் கட்டளையின் (இ) தொடக்கம் (ஏ) ம் பந்திகள், இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாயைப் பொறுத்தமட்டில் இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு மன்னார் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி, (உணவு), மன்னார் மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
| --- | --- | --- |
| விபரம் | மொத்த வியாபாரியின் மொத்த அந்தரொன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | சில்லறை வியாபாரி நிகர இருத்தலொன்றை விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| செத்தல் மிளகாய் .. .. | 88 49 .. | 0 88 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. ஏ. 46. **உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்).**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்படும் தத்துவங்களைக்கொண்டு அனுராதபுர மாவட்ட விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), டொன் சார்ல்ஸ் லயனல் அமரசிங்க ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ம் திகதியைக் கொண்ட 11,505 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட ஏ. 43 ம் இலக்கமுள்ள உணவு விலைக்கட்டளையில் இறக்குமதியாளரின் ஆகக்கூடிய மொத்த விலைகள், மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள், முதலியவையைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2 (i) ம் (ii) ம் 3 (i) ம் (ii) ம் பந்திகளில் காணப்படும் விலைகளையும் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல்மிளகாய் கொண்ட எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 (i) ம், ii ம், 3 (i) ம் (ii) ம் பந்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை இறக்குமதியாளர் ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும் மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையில் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் எவராகிலும் 2 ம் 3 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள எல்லைக்குள் விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ம் திகதியைக் கொண்ட 11,505 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ம் திகதி பிரசுரமான உப உணவுப் பொருட்களைக் குறிக்கும் (iii) ம் பந்தியிலிருந்து (viii) ம் பந்திவரையுள்ள இலக்கம் ஏ. 43 ஐக் கொண்ட விலைக் கட்டளையுடன் இத்துடன் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள பொருளை (செத்தல்மிளகாய்) குறிக்கும் அப்பந்திகள் இணைக்கப்பட்டுள்ளவை போலப் பாவிக்கப்படல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ம் திகதி அன்று பகல் 12 மணிக்கு அனுராதபுரத்தில் கையொப்பம் இடப்பட்டது.

டி. சி. எல். அமரசிங்க,
பதில் விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அனுராதபுர மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | | பத்தி 3 | |
| --- | --- | --- | --- | --- |
| விபரம் | அனுராதபுரம் நகரசபை வட்டாரம், துலானை இல. 23 (C) யும் கெக்கிராவை நகரசபை வட்டாரமும் உட்பட | | அனுராதபுர நிர்வாக மாவட்டம், அனுராதபுர நகரசபை மாவட்டம், துலானை 23 (C) கெக்கிராவை நகரசபை வட்டாரங்கள் நீங்க | |
| | (i) | (ii) | (i) | (ii) |
| | மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த அந்தரின் மொத்த விற்பனவுவிலை | சில்லறை வியாபாரியின் நிகர றுத்தல் சில்லறை விற்பனவு விலை | மொத்த வியாபாரியின் மொத்த அந்தரின் கூடிய மொத்த விற்பனவு விலை | சில்லறை வியாபாரியின் நிகர றுத்தலின் சில்லறை விற்பனவு விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| செத்தல் மிளகாய் | 87 48 | 0 86 | 87 73 | 0 87 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. R/13/1958. உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்)

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவினாலும், எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு இரத்தினபுரி மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மத்தியாஸ் ஸ்ரீவன் சில்ட்டஸ் குணவர்தன ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ந் திகதியைக்கொண்ட 11,480 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட R/10/1958 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவையைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 3 ம், 4 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும், 2 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய் பற்றிய எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாக நேரொத்த 1 ஆம் பத்தியில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ந் திகதியைக்கொண்ட 11,480 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதி பிரசுரமான உப உணவுப் பொருட்களைக் குறிக்கும் 3 ம் பத்தியிலிருந்து 8 ம் பத்திவரையுள்ள இலக்கம் R/10/1958 ஐக்கொண்ட விலைக் கட்டளையுடன் இத்துடன் கீழ்க்காணும் அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள பொருளைக் குறிக்கும் அப்பத்திகள் இணைக்கப்பட்டுள்ளவை போலப் பாவிக்கப்படல் வேண்டுமென ஆணையிடுகிறேன் ;

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எம். எஸ். சீ. குணவர்தன,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), இரத்தினபுரி மாவட்டம்.

### அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| (1) இரத்தினபுரி நகராண்மைக் கழக எல்லை, (ஆ) பள்ள பத்து (கவரசிரிய வாசம நீங்கலாக) குக்குள் கோறளையில், (இ) குருவித்தை கோறளையில் உள்ள உடபத்து, கிராம விதானைப் பகுதிகளான (இறற்று கிலிமலே தெற்கு, கிலிமலே வடக்கு, மற்றும் குடாவ கிராம விதானைப் பகுதிகள் நீங்கலாக) கரந்தனையும் மற்றும் களத்துவாவ கிழக்கும் | செத்தல் மிளகாய் .. | 86.0 .. | 0.87 |
| (2) குருவித்தை கோறளையில் உள்ள பள்ளபத்து (களத்துவாவ கிராமப் பகுதி நீங்கலாக) மெடபத்து (கரந்தானை கிராமப் பகுதி நீங்கலாக) | செத்தல் மிளகாய் .. | 85.75 .. | 0.86 |
| (3) (அ) நவதுன் கோறளையிலுள்ள உடபத்து, மெடபத்து மற்றும் பள்ள பத்து, (அ) குக்குள் கோறளையில் உள்ள மெடபத்து | செத்தல் மிளகாய் .. | 86.15 .. | 0.88 |
| (4) (அ) பலாங்கொடை நகராண்மைக்கழக எல்லை (ஆ) இரக்குவானை பட்டின சபை எல்லை, (இ) குருவித்தைக் கோறளையில் உள்ள கிராம விதானைப் பகுதிகளான இறற்று, கிலிமலே வடக்கு, கிலிமலே தெற்கு மற்றும் குடாவ ; (ஈ) கடவத்த மெட கோறளையிலுள்ள கெலபற்ற பலாத்த, கெல உட பலாத்த (கல்தோட்ட வாசம் நீங்கலாக) மற்றும் உவேகம் பத்து ; (உ) அட்டகலான் கோறளையிலுள்ள பனில்பத்து, மெடபத்து, மற்றும் பள்ளபெத்த கிராம விதானைப் பகுதி ; (ஊ) குக்குள் கோறளையிலுள்ள உடபத்து மற்றும் கவரசிரிய வாசம் | செத்தல் மிளகாய் .. | 86.25 .. | 0.89 |
| (5) (அ) கொலன்ன கோறளையிலுள்ள கொலன்னகம் பத்து மற்றும் தியபொத்தகம பத்து ; (ஆ) கடவத்தை கோறளையிலுள்ள தல்பித்த கம்பத்து ; (இ) அட்டகலான் கோறளையிலுள்ள தேபத்து (பள்ளபத்த கிராம விதானைப் பகுதி நீங்கலாக) ; (ஈ) மெத கோறளையிலுள்ள கல்தோட்ட வாசம் | செத்தல் மிளகாய் .. | 86.50 .. | 0.90 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்கலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. கே. இ. 43. உப உணவுப் பொருட்கள்.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கேகாலை உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நாகமுத்து புலேந்திரன் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ந் திகதியைக் கொண்ட 11,511 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதி கே. இ. 40 இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள் முதலியவையைப் பொறுத்த மட்டில் குறித்த அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாயைக் கொண்ட எனது விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பகுதிகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையாய் வருமாறு விதிக்கிறேன்.

(3) 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ம் திகதியைக் கொண்ட 11,511 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதி, கே. இ. 40 இலக்க விலைக்கட்டளையுடன் இத்துடன் கீழ்க்காணப்படும் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள பொருளைக் குறிக்கும் அப்பந்திகள் இணைக்கப்பட்டுள்ளவை போலப் பாவிக்கப்படல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ந் திகதி அன்று பி.ப. 2 மணிக்கு கேகாலையில் கையொப்பம் இடப்பட்டது.

என். புலேந்திரன்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கேகாலை மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த வியாபாரி ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | பத்தி 3<br>நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| செத்தல் மிளகாய் .. .. | 90 09 | 0 88 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப் பொருளை விற்கலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. ஏ. 47. **உப உணவுப் பொருட்கள்.**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் (3) (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அனுராதபுர மாவட்ட விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) டொன் சார்ள்ஸ் லையனல் அமரசிங்க ஆகிய யான் இக்கட்டளையால்—

1958 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22 ம் திகதியைக் கொண்ட 11,561 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17 ம் திகதி தமிழில் பிரசுரிக்கப்பட்ட ஏ. 45 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையை பின்வரும் முறையில் திருத்தியமைக்கிறேன்.

(அ) 2 ம் பந்தியை நீக்கி அதற்குப்பதில் கீழ்வருவனவற்றைப் புகுத்தவும். இதனோடு இருக்கும் அட்டவணையின் 2 (1) ம் 11) ம், 3 (1) ம், (11) ம் பந்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றை இறக்குமதியாளர் ஒருவர் விற்கும் ஆகக் கூடிய மொத்த விலையாகவும். நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக் கூடிய விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒரவர் பாவிப்பாளருக்கு விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையில் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளை யேனும் எவராகினும் 2 ம் 3 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள எல்லைக்குள் விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) 3 ம் பந்தியில் (அ) பிரிவில் " ஒரு பொருளை ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தரைக் கொண்ட " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும்.

(இ) 3 ம் பந்தியில் (ஆ) பிரிவில் " ஒரு பொருளில் ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தருக்குக் குறைந்த " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர " என்ற சொல்லைப் புகுத்தவும்.

(ஈ) அட்டவணையை நீக்கி அதற்குப் பதில் கீழ் வருவனவற்றைப் புகுத்தவும்.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | | பத்தி 3 | |
|---|---|---|---|---|
| விபரம் | அனுராதபுரம் நகரசபை வட்டாரம், துலானே இல. 23 (C)யும் கெக்கிராவை நகரசபை வட்டாரமும் உட்பட. | | அனுராதபுரம் நிர்வாக மாவட்டம், அனுராதபுர நகரசபை மாவட்டம் துலானே 23 (C) கெக்கிராவை நகரசபை வட்டாரங்கள் நீங்கலாக. | |
| | (1)<br>மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய நிகர அந்தர் ஒன்றின் மொத்த விற்பனை விலை | (11)<br>சில்லறை வியாபாரியின் நிகர ருத்தல் ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை | (1)<br>மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய நிகர அந்தர் ஒன்றின் மொத்த விலை | (11)<br>சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| உருளைக் கிழங்கு | 31 24 | 0 33 | 31 49 | 0 34 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் திகதி மு.ப. 11 மணிக்கு அனுராதபுரத்தில் கையொப்பமிடப்பட்டது.

டீ. சி. எல். அமரசிங்க,
பதில் விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அனுராதபுரம்.

உணவு விலைக் கட்டளை இல. எம். என்./12/1958.

உப உணவுப் பொருட்கள்.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக் களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மன்னார் மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சண்முகம் பரமநாதன் ஆகிய யான் இக் கட்டளையால்—

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ம் திகதியைக் கொண்ட 11,561 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ம் திகதி தமிழில் பிரசுரிக்கப்பட்ட எம். என்./10/1958 இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையை பின்வரும் முறையில் திருத்தி அமைக்கிறேன்—

(அ) 1 ம் பந்தியில் " விசேட " என்னும் சொல்லுக்குப் பின்னும் " அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் " என்னும் சொற்களுக்கு முன்னும் " இலங்கை " என்ற சொல்லைப் புகுத்தவும்.

(ஆ) 2 ம் பந்தியை நீக்கி அதற்குப் பதில் கீழ்வருவனவற்றைப் புகுத்தவும்—

இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தரொன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தலொன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன் ; குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பிரிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாக மன்னார் மாவட்ட எல்லைக்குள் விற்கலாகாது.

(இ) 3 ம் பந்தியில் (அ) பிரிவில் " ஒரு பொருளை " என்னும் சொற்களுக்குப் பின்னும், " அந்தரைக்கொண்ட " என்னும் சொற்களுக்கு முன்னுமுள்ள " மொத்த " என்னும் சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக " நிகர " என்னும் சொல்லைப் புகுத்தவும்.

(ஈ) 3 ம் பந்தியில் (ஆ) பிரிவில் " ஒரு பொருளில் ஒரு " என்னும் சொற்களுக்குப் பின்னும் " அந்தருக்குக் குறைந்த " என்னும் சொற்களுக்கு முன்னும் உள்ள " மொத்த " என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக நிகர என்ற சொல்லைப் புகுத்தவும்.

(உ) அட்டவணையை நீக்கி அதற்குப் பதில் கீழ்வருவனவற்றைப் புகுத்தவும்—

### அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| விபரம் | மொத்த வியாபாரியின் நிகர அந்தரொன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | சில்லறை வியாபாரி நிகர இருத்தலொன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| உருளைக் கிழங்கு .. .. | 32 39 .. | 0 34 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும் இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் திகதி முற்பகல் 10 மணிக்கு மன்னார் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.